# பிரேம வாஹினி

பகவான்

ஸ்ரீ சத்ய சாயி பாபா

35. The Universal Soul is One and Only One

**சர்வ அந்தர்யாமி ஒருவரே! ஒருவர் மட்டுமே!**

பரமாத்மா சர்வாந்தர்யாமியாக அன்று முதல் இன்று வரை ஒவ்வொரு பொருளிலும் மையம் கொண்டுள்ளார் என்று சந்தேகத்துக்கிடமின்றி வேதங்களும் சாத்திரங்களும் ரிஷிகளின் செய்திகளும் ஒரே மாதிரியாகப் பிரகடனப்படுத்தியுள்ளன. அதைப் போலவே 'சேவிக்கப்பட்டவன்'. 'சேவித்தவன்', 'சேவையின் சிறப்பியல்புகள்' (ப்ரக்ருதி) ஆகியவற்றிற்கிடையே உள்ள உறவுமுறை பற்றி இடைவிடாமல் விவாதம் நடந்துகொண்டே இருக்கிறது. சர்வ அந்தர்யாமியான பரமாத்மாவை எங்கெங்கோ சென்று தேடவேண்டிய அவசியமில்லை. அவர் தேடுபவரின் மிக அருகிலேயே இருக்கிறார் என்று பெரிய பக்தனான பிரகலாதன் கூறும் பாகவத வாசகத்தை ஒவ்வொரு ஆத்திகரும் கேள்விப்பட்டிருப்பார்கள்.

**" அவர் இங்கிருக்கிறார் அங்கில்லை.**
**இனி இதுபோன்ற ஐயம் தேவையில்லை.**
**ஓ! தானவர்களின் தலைவனே! கூர்ந்துகேள்.**
**எங்கு தேடினும் எங்கு பார்க்கினும்**
**அங்கங்கு...இருப்பவர் அவர்தான் "**

இறைவனுக்கு ஒரு குறிப்பிட்ட குணம் மட்டும் இருக்கிறது.....ஒரு குறிப்பிட்ட வடிவம் மட்டுமே இருக்கிறது...இப்படி மக்கள் பலவாறாகப் பேசுகிறார்கள். இப்படிப்பட்ட கருத்துக்கள் சத்தியத்தைப் பற்றிய கற்பனை, யூகத்திற்கேற்ப உருவானவை. இவைகளிலும் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அவைகளே அடிப்படை சத்தியம் ஆகிவிடாது. அந்தக்கோட்பாடுகள் உலக அறிவை நடைமுறைப்படுத்துவதற்கேற்ப உறுதி பெறுபவை; பரம்பொருள் பற்றிய நிறைஞானமாக அவற்றைக் கருதமுடியாது. ஏனெனில் பூர்ணத்தைப் பற்றி பேசுதல் அல்லது பார்த்தல் என்பது நடவாத காரியம்

36. Be Universal in outlook.

பிரபஞ்ச சின்னம்

இப்படி இருப்பினும் பக்தர்களும் சாதகர்களும் அவரவர் சொந்த அகமுக முன்னேற்றத்திற்கேற்ப அவரவர்க்குரிய வழிபாட்டு அடிப்படையை ஒட்டி ஏதாவது ஒரு உருவத்தை உருவாக்கிகொண்டு இருக்கிறார்கள். பரமாத்மா எங்கோ ஒரு அயோத்தி அல்லது துவாரகையில் மட்டும் இருப்பதாகவும் மற்ற இடங்களில் இல்லாதது போன்றும் நினைத்து அவர்கள் வழிபடுகிறார்கள். (ஏதோ ஓர் உருவம்

அல்லது படம் அங்கே மட்டும் இருப்பது போன்றும் மற்ற இடத்தில் இல்லாததாகவும் நடைமுறையில் இருப்பதை நாம் காண்கிறோம்) அந்த வடிவத்தையே அவர்கள் பூர்ணம் என்று வழிபடுகிறார்கள். அப்படிச்செய்வது தவறல்ல என்பது என்னவோ உண்மைதான். தாங்கள் வழிபடும் நாம ரூபம் மட்டுமே தெய்வீகமானது, சத்தியமானது, மற்றவர்களுடையது தாழ்ந்தது, தகுதியற்றது என்று பக்தர்கள் முழங்கக்கூடாது. ஒருவருக்குத் தனது நாமமும் ரூபமும் எத்தகைய புனிதமும் பிரியமும் உடையதாக இருக்கிறதோ அதைப் போலவே மற்றவர்கள் லட்சியப்படுத்தும் நாமரூபங்களையும் மதிக்க வேண்டும் எனும் உண்மையை உணரவேண்டும்.

வடிவத்துடன் இப்படி ஒரு லட்சிய நோக்கை இணைத்துவிட்டால் அது உள்ளபடியே பிரபஞ்சத்தின் சின்னமாகிவிடும்; ஆனால் வெறும் பிரபஞ்ச சின்னம் எப்படி பிரபஞ்சமாகவே ஆகும்? ஒருபோதுமாகாது. எப்போதும் இந்த உணர்வுடன் ஒவ்வொருவரும் அர்த்தமற்ற வெறுப்புக்கு இடம் கொடாமல், எல்லா வடிவங்களும் சமமான மதிப்பும், உண்மையும் உடையவை எனும் லட்சியப்பார்வையைப் பெறவேண்டும். இந்த மனப்பக்குவம் இல்லாமல் பூர்ணத்தை உணர இயலவே இயலாது. இந்தத் தத்துவச் (உருவங்கள்) சின்னங்கள் அனைத்தும் முழுமையான, நுண்மையான தெய்வீகத் தத்துவத்துக்குள் அடங்கியவை. பரந்து விரிந்த சமுத்திர நீரின் ஒவ்வொரு துளியிலும் அதன் இயல்பு சிறிதும் குன்றாமல் முழுமையாக உள்ளது; அதற்காக அந்த ஒரு துளிதான் சமுத்திரம் என்று பொருள்படுத்த முடியுமா? சமுத்திரத்தையும் ஒரு துளியையும் நாம் இரண்டு தனிப்பட்ட பொருளாகப் பார்த்தபோதும் அவற்றின் இயல்பும் சுவையும் ஒன்றாகத்தான் உள்ளன. அதைப்போலவே சர்வ அந்தர்யாமியான பரமாத்மாவும் அந்தப்பரமாத்மாவை உணர்த்துவதற்காக அதிலிருந்து தோன்றிய நாமங்களும், ரூபங்களும் வெவ்வேறானவை அல்ல; அவை அனைத்தும் சமமானவையே.

எங்கும் நிறைந்த அனைத்தையும் தன்னகத்தே கொண்ட இந்தத் தூய்மையான பிரம்மத்தை வர்ணிக்கும்போது அதிலுள்ள விஷயமும், அதை விளக்கும் முறையும் பேசுபவரின் கோட்பாடுகளுக்கும், கேட்பவரின் சுவை நுட்பத்திற்குமேற்ப அமைகின்றன. தனிப்பட்ட பக்தர் ஒருவர் வழிபடும் நாமமும் ரூபமும் குணம் குறியற்ற அருவ நிலையாக மாறும்போர்து அது பிரம்மம் எனப்படும்; அதே பிரம்மம் குணம், வடிவங்களுடன் தோன்றும்போது அது ராமன், கிருஷ்ணன், விஷ்ணு அல்லது சிவன் எனக் குறிப்பிடப்படுகின்றன.

அதீதமான பரவச நிலை அடையும் போது தனக்கும் இறைவனுக்கும் இடையே இருந்த வேறுபாடு மறைந்துவிட்டது என்று மற்ற சமயத்தைச் சார்ந்தவர்கூட ஒத்துகொள்கிறார்களல்லவா? பிற சமயங்களை, பிற நாட்டைச் சார்ந்தவர்கூட ஒத்துக் கொள்கிறார்களல்லவா? பிற சமயங்களை பிற நாட்டைச் சேர்ந்த யோகிகளும் தத்துவ மேதாவிகளும் கூட இந்த பாகுபாடற்ற அனுபூதியை

பரபக்தியின் மூலம் அடைய முடியுமென்பதை எவ்விதமான மறுப்பும் கூறாமல் ஏற்றுக்கொண்டுள்ளனர். அணு அளவு வித்தியாசம் இருப்பினும், அது தனி நபரின் சொந்த விருப்பத்தையும் சுவையையும் பொருத்து இருக்குமே ஒழிய அடிப்படையில் அப்படிப்பட்ட தனித்தன்மை இருந்ததில்லை.

நாமமும் ரூபமும் குறுக்கிடும்போதுதான் அவை ப்ரக்ருதி, பரமாத்மா, பக்தன் என வேறுவேறாகப் பெயர் பெறுகின்றன. நாமமும் ரூபமும் மறையும்போது, ஆணா, பெண்ணா, அலியா முதிலிய சந்தேகங்கள், வாதங்கள் எழவே எழாது. அப்போது எப்படிப்பட்ட வர்ணனையும் பொருந்தும். ஏனெனில் கற்பனைக்கு அப்பாற்பட்ட அதீதமான ஒன்றுக்கு எந்த நாமமும் வடிவமும் சூட்டப்படலாம். ஆனால் உண்மையில் அதற்கு எந்த வடிவமும் பெயரும் இல்லை. அது எங்கும் நிறைந்தது. எல்லாம் வல்லது. எங்கும் நிறைந்த இந்த நுண்பொருளுக்கு பக்தன் ஒருவன் குணம் குறிகளுடன் கூடிய வடிவம் ஒன்றைக் கொடுத்து அதை முறைப்படி வழிபடுவானாகில் அதன் உண்மையான இயல்பைத் தன் சாதனையின் வாயிலாகவே பக்தன் தெளிவாக உணர்ந்து கொள்வான்.

**37. Incornations reveal the Universal form of the Lord**

## அவதாரங்கள் இறைவன் சர்வாந்தர்யாமி என்பதை உணர்த்துகின்றன

இந்தச் சாதனைமூலம் அறிவிற்கும், அந்த சத்தியத்துக்கும் அருள் பாலிக்கவும் பக்தர்களுக்கு ஆனந்தம் அளித்து ஆசிர்வதிக்கவும் குணங்குறியற்ற பரமாத்மா இவ்வுலகில் நாம ரூபத்துடன் அவதரிக்கிறது; உடலுடன் கூடிய உயிர்கள் அனைத்தும் உறுதியான அனுபவமும் இன்பமும் பெற நம்பிக்கையும் ஊட்டுகிறது. இந்த அனுபூதிகள் (அனுபவங்கள்) மூலமும் அவதாரங்கள் மூலமாகவும் பரமாத்மாவானவர் சர்வ அந்தர்யாமி என்பதையும் சர்வபூத அந்தராத்மா என்பதையும் சிறப்பாக உணர்த்துகிறார். ஸ்ரீ கிருஷ்ணன் தன் சொந்த வடிவத்திலேயே படைப்பு முழுவதையும் காட்டியருளினார். படைப்பு முழுவதும் அடங்கிய கண்ணனின் விஸ்வரூப தரிசனத்தை தன் சொந்த கண்களால் நேரில் காணும்வரை கண்ணன் சர்வ அந்தர்யாமி என்பதை அர்ஜுனனே காணத் தவறிவிட்டான்.

நேசிப்பவர், நேசம், நேசிக்கப்படுபவர் அவையனைத்தும் ஒன்றேதான், அதேதான். நேசம் இல்லாமல் நேசிப்பவர் இருக்க முடியாது. நேசம், நேசிப்பவர் இரண்டும் இருப்பினும் நேசிக்கப்படுபவர் இல்லையேல் ஒரு வேலையும் இருக்காது. இந்த மூன்றிலும் அன்பே பிரதானமாக இருக்கிறது. எது முதன்மையாக, சமமாக, ஒவ்வொன்றிலும் உறைந்துள்ளதோ அதுவே பரமாத்மா. எனவே இம்மூன்றிலும் வேறுபாடே இல்லை. மூன்றிலும் அன்பு சர்வாந்தர்யாமியாக நுட்பமாக உள்ளது; எனவே ஒவ்வொன்றும் பரமாத்ம சொரூபமே என்று உணர முடியுமல்லவா; நிச்சயமாக வெற்றிகரமாக அதை

உணர இயலும். ஒவ்வொன்றிலும் ப்ரேமை நிரம்பி வழிகிறது. எனவே நாம் பரமாத்மாவை ப்ரேம சொரூபா என்று தயங்காமல் முழங்கலாம். படைப்பு முழுவதிலும் வாழும் உயிரினம் அனைத்திலும் ப்ரேமையே பல்வேறு வடிவங்களுடன் தோற்றமளிக்கிறது.. ப்ரேமைக்கு அது செல்லும் மார்க்கத்திற்கேற்ப வாத்சல்யம், அனுராகம், பக்தி, இஷ்டம் முதலிய பல பெயர்கள் இருப்பினும் அதன் இயல்பு மாறாது; அதாவது வடிவம் எப்படிப்பட்டதாயினும் அதன் சாரம் மாறாது. இந்த அறிவு மூலமாகவும் அனுபூதியின் அடிப்படையிலும் படைக்கப்பட்ட பொருள்கள் அனைத்திலும் சர்வபூத அந்தராத்மாவாக இருப்பது பரமாத்மாவே எனும் உண்மை தெளிவாக உறுதியாகிறது.

**38. Nondualism teaches the highest knowledge : The Unity of All**

## அத்வைதம் ஐக்கியம் என்ற உன்னதமான அறிவைப் புகட்டுகிறது

ஐக்கியம் குறித்த இந்த அதி உன்னதமான அறிவைப் புகட்டுவது அத்வைதம் எனப்படும். நேசிப்பவர், நேசிக்கப்படுபவரை அதாவது ஜீவன், சிவனைப்பற்றி போதிப்பது த்வைதம் எனப்படும். நேசிப்பவர், நேசிக்கப்படுபவர், நேசம் அதாவது ப்ரக்ருதி, ஜீவன், பிரம்மத்தை போதிப்பது விசிஷ்டாத்வைதம் எனப்படும். ஆனால் இந்த மூன்றும் ஒன்றுதான். பிறந்த குழந்தை மாணவனாக மாறுகிறது.. மாணவன் இல்லத் தலைவனாக மாறுகிறான். ஆனால் இம்மூவரும் ஒருவரே! அதே நபர்தானே! இல்லையா? ஒருவனுடைய நடைமுறைகளும் பற்றுக்களும் பலவாறாக மாறியபோதும் அந்த நபர் ஒருவன்தானே! பாலிலிருந்து வெண்ணையும் மோரும் உருவாகின்றன. எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்ட பால் அத்வைதம், வெண்ணையில் இரண்டு அம்சம் உள்ளது. அது த்வைதம்; வெண்ணையைப் பிரித்தபிறகு எஞ்சியிருக்கும் மோர் விசிஷ்டாத்வைதம். ஆனால் அவற்றின் சுவைகள் மாறியபோதும் நிறம் மாறாமல் எப்போதும் ஒன்றாகவே இருக்கிறது. இப்படியாக எது அனைத்திலும் சமமாக இருக்கிறதோ அது நிர்குண பிரம்மாகும்.

## முளைவிடும் பக்தி விதைகள்

**39. Have firm faith in the unity of Self and Cosmic Lord**

## ஜீவாத்மாதான் பரமாத்மா என்ற உறுதியான நம்பிக்கை வேண்டும்

நேசிப்பவர், நேசிக்கப்படுபவரின் மனப்பாங்கே பக்திக்குரிய விதையாகும். முதலில் வழிபடுபொருளின் சிறப்பியல்புகள் வழிபடுபவரைக் கவர்ந்திழுக்கிறது. இந்தச் சிறப்பியல்புகளைப் பெற தனதாக்கிக்கொள்ள அவர் முயல்கிறார். இது சாதனை எனப்படும். சாதனையின் ஆரம்பத்தில் வழிபடுவோர், வழிபாட்டுப்பொருள் ஆகிய இரண்டின் இடையே வேறுபாடு முழு அளவில் இருக்கும்; ஆனால் சாதனையில் முன்னேற முன்னேற அந்த உணர்வு குறைந்து,

முழுமை நிலையை அடைந்தவுடன் எல்லாவிதமான வேறுபாடும் மறைந்துவிடும். தனக்குப் பிடித்தமான, தேர்ந்தெடுத்த, நாடிய வழிபடுபொருள் எதுவாக இருப்பினும் ஜீவாத்மாதான் பரமாத்மா எனும் உறுதியான நம்பிக்கையுடன் ஒருவர் சாதனை புரியவேண்டும். ஈஸ்வர சாக்ஷாத்காரம் ஆகிய இறைவனை உணரும் ஒரே ஒரு ஆசை மட்டுமே தன்னை மகிழ்விக்கும் தகுதி உடையது என்பதை சாதகர் உணரவேண்டும். வேறு எந்த ஆசைக்கும் மனதில் இடம் அளிக்கக்கூடாது. அதனால்தான் குந்திதேவி பின்வருமாறு ஸ்ரீ கிருஷ்ணனை வேண்டினாள். "ஓ ஜெகத்குரு! துன்பமும் தொல்லையும் எப்போதும் எங்களிடம் இருக்கட்டும். அவைதான் தங்கள் தரிசனத்தை எங்களுக்கு அருளுகின்றன. அந்த தரிசனம் பிறவியை அழிக்கிறது."

அந்த உன்னதமான பொருளை விரும்பவும் தேடவும் செய்யும் பக்தனிடம் இப்படிப்பட்ட மனப்பாங்கு இருக்க வேண்டும். அதன்பின் இன்ப துன்பத்தைப் பொருட்படுத்தாமல், தனது சொந்த மன நிறைவு குறித்து எவ்விதக் கவலையும் கொள்ளாமல், தங்கு தடையின்றி, வைராக்கியத்துடன் அவன் சாதனையில் உறுதியாக ஈடுபடுவான். உண்மையைப் புரிந்து கொண்டபிறகு அவன் முழுமையான மன நிறைவு பெறுவான்.

இந்தக் கோணத்திலிருந்து பார்த்தால் பக்தனுக்கும் ஜீவன் முக்தனுக்கும் வேறுபாடில்லை; அவர்கள் இருவரும் ப்ரகிருதிக்கும் அதன் மும்மலங்களுக்கும், வர்ணாச்ரம தர்மத்துக்கும் அப்பாற்பட்டவர்கள். அவர்களுடைய இதயங்கள் கருணையும் உலகுக்கு நன்மையும் செய்யவேண்டும் எனும் உத்வேகம் நிரம்பியவையாக இருக்கும். அவர்களிடமுள்ள பிரம்மானந்தமே இந்த வழியில் இப்படி இயங்கும்படி அவர்களை உந்துகிறது. அப்படிப்பட்ட பக்தர்களிடம் ஆசையே இருக்காது, (ஏனெனில் 'நான்', 'எனது' எனும் உணர்வுகளால் உருவாக்கப்பட்டவையே ஆசைகள்.) அவனே அழியா இயல்பும் அமிர்த சொரூபமும் உடைய பக்தன். அந்த அமிர்த சொரூபம் நிரம்பப் பெற்ற ஒருவனிடம் ஆனந்தத்தின் இனிமையைத் தவிர வேறு பசி எதுவும் இருக்காது.